

KAP
Kumari Arivial Peravai

# குமரி அறிவியல் பேரவை

www.Kaponline.net
mullanchery@gmail.com
Mullanchery,Mulamkuzhi.P.O, Kanyakumari Dist.629162



## புவியின் குரல் (Voice of the Earth)

## இளம் விஞ்ஞானிகள் தேர்வு 2016-2017

அன்புடையீர்

வணக்கம்

குமரி அறிவியல் பேரவைமாணவர்களின் அறிவுத்திறன்களை மேம்படுத்தி இளம் விஞ்ஞானிகளாக உருவாக்கிவருவதை அறிவீர்கள். பல்துறை அறிஞர்களைக் கொண்டு தன்னார்வப் பணியாக செயல்பட்டுவரும் அறிவியல் பேரவை மாணவர்களிடத்தில் மறைந்துகிடக்கும் ஆற்றல்களை வெளிப்படச் செய்து அறிவுத்தளத்தில் முதன்மைப் படுத்திவருகிறது.

இவ்வாண்டு பயிற்சிக்காக புவியின்குரல் (Voice of the Earth) என்னும் தலைப்பின்கீழ் புவி செல்வம், பஞ்சம், வறட்சி, வெள்ளப்பெருக்கம், மாசு ஆகியவைக் குறித்து பல துறை நிபுணர்களைக் கொண்டு பயிற்சியும் பல்துறைகளில் ஆய்வும் வழங்க இருக்கிறது. கள ஆய்வுகளும் ஆய்வுக் கட்டுரைகளும் ஒருபல்கலைக் கழகத்தில் சென்று பேராசிரியர்கள் முன்னிலையில் விவாதத்திற்கு உட்படுத்தி பிறகு நூலாக வெளியிடப்படும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட VIII-ம் வகுப்பு மாணவர்களுக்கு பள்ளிப்பாடங்கள் பாதிக்கப்படா வண்ணம் விடுமுறைநாட்களில் பயிற்சியளிக்கப்படும் தொண்டு மனப்பான்மையுடன் (இலவசமாக) நடத்தப்பட்டுவரும் இந்நிகழ்ச்சியை கல்வி நிலையத்தாரும், ஆசிரியர்களும், மற்றோரும் பெரிதும் பாராட்டிவருகின்றனர்.

2016 ஜூலை மாதம் 9-ம் நாள் (சனிக்கிழமை காலை 9.00 மணிமுதல் மாலை 4 மணிவரை) நாகர்கோவில் ஸ்காட்கிறிஸ்தவக் கல்லூரி கலை அரங்கினில் நடைபெற இருக்கும் கருத்தரங்கத்தில் இவ்வாண்டுக்கான பயிற்சிகள் குறித்து விளக்கம் தர இருக்கிறோம்.

இக்கருத்தரங்கத்தில் தங்கள் பள்ளியில் VIII -ம் வகுப்பில் படித்துவரும் மாணவ மாணவியருள் தாய் மொழியில் (தமிழ் அல்லது மலையாளம்) அல்லது ஆங்கிலத்தில் பிழையின்றி எழுதவும் வாசிக்கவும் திறன்மிக்க 5 மாணவமாணவியரைத் தேர்வு செய்து அனுப்ப வேண்டுகிறோம். வழி காட்டுதலுக்காக அதே பள்ளியிருந்து 2 ஆசிரியர்களையும் பங்கேற்கச் செய்ய அழைக்கிறோம். (பெற்றோர்களும் கலந்துகொள்ளலாம்)

இக்கருத்தரங்கில் வருகை புரிவோரின் விபரம் ஜூலை முதல் வாரத்திற்குள் கீழ்க்கண்டமுகவரியில் தெரியப்படுத்த வேண்டுகிறோம். முழு நாள் நிகழ்வு ஆதலால் மதியஉணவு கொண்டுவரவேண்டும்.

நன்றி　　　　இவண்

**முள்ளஞ்சேரி மு. வேலையன்**



**முள்ளஞ்சேரி மு. வேலையன்**
அமைப்பாளர்,
குமரி அறிவியல் பேரவை
முளங்குழி அஞ்சல் 629162, குமரிமாவட்டம்.
Cell : 9942758333, 9489751175

